# அனைத்து இனத்தவர்களும் கலந்து கொள்ளும் பொது மண்டபமாக விளங்க வேண்டும்



( எஸ்.ஜீவராஜா )

கோலாலம்பூர், ஆக. 11-

அனைத்து இனத்தவர்களும் கலந்து கொள்ளும் பொது மண்டபமாக தாமான் ஸ்ரீ சினார் சமூக மண்டபம் விளங்க வேண்டும் என்று சுற்றுவட்டார குடியிருப்பாளர்கள் கேட்டுக் கொண்டனர்.

எனவே இந்த விவகாரத்தை இனப்பிரச்சினையாக மாற்ற வேண்டாம். இனப்பிரச்சினையாக மாற்றும் முயற்சிகளுக்கு யாரும் துணைப் போகக்கூடாது என்று அவர்கள் வலியுறுத்தினர்.

அண்மையில் தாமான் ஸ்ரீ சினாரில் உள்ள கராத்தே பயிற்சி மையத்தின் ஒரு பகுதி உடைக்கப்பட்டது. இந்த இடத்தை காலி செய்ய வேண்டும் என்று அதன் பொறுப்பாளர்களுக்கு ஒரு மாத காலம் கெடு விதிக்கப்பட்டது.

இந்நிலையில் அந்த சமூக மண்டபத்தை மீட்கும் கோலாலம்பூர் மாநகராட்சி மன்றத்தின் நடவடிக்கையின் கீழ் முழு ஆதரவை தெரிவித்துக் கொள்கிறோம் என்ற சிகாம்புட் நாடாளுமன்ற தொகுதியில் உள்ள பல குடியிருப்பாளர்கள் சங்கங்கள் தெரிவித்தது.

தாமான் ஸ்ரீ சினார், தாமான் இண்டா பிந்தாங், அனாக் அனாக் சிகாம்புட், கம்போங் சிகாம்புட் பஹாகியா, தாமான் ஸ்ரீ பிந்தாங் பாசா 3, தாமான் கியூபெக்ஸ், மெளனத் கியாரா, டூத்தாமாஸ் ராயா, தாமான் செஜாத்ரா உட்பட 16 குடியிருப்பாளர்கள் சங்கங்கள் மாநகராட்சி மன்ற முடிவுக்கு வரவேற்பு தெரிவித்தன.

ஒரு குறிப்பிட்ட தரப்பினரின் பராமரிப்பில் இருந்த அந்த பொது மண்டபம் இனி அனைத்து இனத்தவர்களின் நிகழ்ச்சிகளுக்கும் பயன்பட வேண்டும் என்று அவர்கள் கூறினர். இதனிடையே இது பொது மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஒருவர் மீது ஒருவர் குறை கூறாமல் அனைத்து தரப்பினரும் ஒன்று கூடி பேசி இந்த பிரச்சினைக்கு சுமுகமான முறையில் தீர்வு காண்பது தான் சரியான நடவடிக்கையாக இருக்க முடியும் என்று தாமான் கியூபெக்ஸ் குடியிருப்பாளர்கள் சங்கத்தின் தலைவர் சி.பெருமாள் வலியுறுத்துகிறார்.

